தனிப்பிரதி - ரூ. 20/-        ஆண்டு சந்தா- ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

ஆகஸ்டு 2023        மலர் 2 இதழ் 16        இனிக்கும் இலக்கிய இதழ்



## காந்திக்கு எதிரான
## “ஹரிலால்...

## சமூக அக்கறையில் தாழையாரின் சிறுகதைகள்

# தீர்த்தக் கரையினிலே
# தீராத காதலாலே




**தமிழ்மாமணி முனைவர்**
**தாழை இரா.உதயநேசன்**


தீர்த்தக் கரையினிலே
தீராத காதலாலே
தீபமாய் எரிகிறேன்
தீர்க்கப் பார்வைகள் தருவாயோ?

காதல் தாகம்
காரிகை உன்னாலே
காணும் இடமெல்லாம்
காந்தமாய் இழுத்தாயே

அழகென்றச் சொல்விற்கு

அர்த்தம் தந்தவளே
அணையாத ஆசைகளை
அள்ளித்தந்து  சென்றவளே

நெஞ்சோரம் நீயே
நெடுநாளாய் அமர்ந்தவளே
நெய்தல் பெண்ணே
நெருங்கி வந்தாலென்ன

சிவந்த நிறத்தழகி

சிங்காரப் பேரழகி
சித்தம் கலங்குதடி
சினங்கொண்டு போகாதே

அல்லி மலரே
அழகு சிலையே
அணைத்துக் காப்பேன்.
அனுதினம் உனையே.

# முத்தமிழ் நேசன்

## இனிக்கும் இலக்கிய இதழ்

ஆகஸ்டு 2023 மலர் 2 இதழ் 16

**நிறுவனர்**

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

பாரதி சந்திரன்

**ஆசிரியர் குழு**

ஜோ. சம்பத்குமார்
மு. தனஞ்செழியன்
எ.பாவலன்
த. பரிமளா

**கௌரவ ஆலோசகர்:**

கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்
எண்:10, முதல் தெரு,ஸ்ரீராமபுரம்
ஆம்பூர் – 635 802
திருப்பத்தூர் மாவட்டம்


## பொருளடக்கம்


**கவிதைகள்**

கவிஜி
முனைவர் கா. ந. கல்யாணசுந்தரம்
S.மகேஷ்
முனைவர் ஓசூர் மணிமேகலை
கடம்பத்தூர் கவியரசன்
ம.அமிர்தா தமிழரசன்,
Dr.ஜலீலா முஸம்மில்
அய்ஷத்அப்ஸத்
ஜெ.அண்ணாதுரை
மியூரியல் ஜெயானந்தசாமி
கவிரதன்
எம்.பி.எஸ்.பாலா,
டாக்டர் ராமா வைத்தி
வ.சு.வசந்தா
ரா.பிரேம் சுரேஷ்
து.பா.பரமேஸ்வரி
சாந்திஸ்ரீதரன்
இரா. அற்புதகிருஷ்ணா
பூங்குழலி

**கட்டுரைகள்**

**“ஹரிலால் த/பெ மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி” - நாவல்- ஒரு பார்வை**
பொன்.குமார்

**சமூக அக்கறையில் தாழையாரின் சிறுகதைகள்**
பேரா.மு.தனஞ்செழியன்.

**அனுபவம் எழுத்தா? எழுத்து அனுபவமா?**
முனைவர் பெ.சசிகுமார்

**சிறுகதை**

**கட்டாக்காலி**
சுந்தரிமணியன்


இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,
யுனிகோட் (unicode) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

**mutamilnesan2022@gmail.com**

# தலையங்கம்

“ இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்”

என்று ஹைக்கூவில் ஒரு அதிர்வை, கவிதை உலகில் ஏற்படுத்திய கவிதைகளுக்குச் சொந்தக்காரர், உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் துணைத் தலைவர் ஓவியக் கவிஞர் அமுதபாரதி ஐயா அவர்களுக்குச் சௌமா இலக்கிய விருதுக் குழு, ’வாழ்நாள் சாதனையாளர் விருது’ அறிவித்திருக்கின்றனர்.

தமிழில் நவீன கவிதைகளைத் தோற்றுவித்து, இளைஞர்கள் மத்தியில் கொண்டு போய்ச் சேர்த்த பெருமை நம் கவிஞர் அமுதபாரதி அய்யாவிற்கு உரியது. தொடர்ந்து கரடு முரடான பாதைகளைக் கடந்து வந்தாலும், இடையறாது தமிழ்ப் பணி செய்த மகாகவிஞர் அமுதபாரதி அவர்கள்.

விருது பெரும் ஓவியக் கவிஞர் அமுதபாரதி அவர்களுக்கு, முத்தமிழ்நேசன் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறது. இவ்வாறு நாடு முழுவதும் அவர் கவித்துவம் மணம்வீசி நிறையட்டும்.

நமது, உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன் ஐயா அவர்களுக்குப் பாரதிய வித்யா பவன், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ், உறவுச்சுரங்கம் ஆகிய அமைப்புகள் சேர்ந்து “தமிழ் விருது” கொடுத்துப் பாராட்டியது..

**கவிஞர் அமுதபாரதி**



**DR..குறிஞ்சி வேந்தன்**



“தமிழ்” விருது பெற்ற ஐயா அவர்களுக்கு அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்கள் மற்றும் உலக முத்தமிழ்க் கூட்டமைப்பு, மற்றும் முத்தமிழ்நேசன் தத்தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறது .

மணிப்பூரில் நடந்த தொடர்நிகழ்வுகள், நம் நாட்டில் இன்னும் மாறாத பெண் அடிமைத்துவத்தையும், மறைமுகமாகத் தன் மேல் ஏவப்பட்ட தாக்குதல்களுக்கு இரையாகிப் போன பழங்குடி மக்களின் அறியாமையையும் உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

உண்மையில் அங்கு மட்டுமல்ல, இயற்கை வளத்தைச் சுரண்டும் கார்ப்பரேட் நிறுவனங்களின் அசாத்திய பலத்தால், உலகத்தின் பல பகுதிகள் இவ்வாறு தான் சூறையாடப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன என்பதை ஏவலுக்குப் பலியாகும் மக்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்கள் ?.

மக்களாகிய நாம் தான் விழித்துக் கொள்ள வேண்டும்

நேசமுடன்,

**பாரதிசந்திரன்**

( இதழுக்குச் சந்தா கட்ட விரும்பும் வாசகர்கள் சந்தா தொகையை Google pay வழியாகச் செலுத்தலாம். Google pay No : 9159698466. சந்தா கட்டிய பின் தங்கள் முகவரியை இந்த எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் தெரியப்படுத்துங்கள். இதழின் வளர்ச்சிக்கும், தமிழின் வளர்ச்சிக்கும் சந்தாக் கட்டத் தாமதிக்காதீர்கள். அச்சுப் பதிப்பாகவும், மின்இதழாகவும், உங்கள் படைப்புகளை உலகம் முழுவதுமிருக்கும் இலக்கிய வாசகர்கள் இவ்விதழ் மூலம் படிக்கின்றனர். எனவே, தொடர்ந்து எழுதவும் செய்யுங்கள்)

எல்லாருக்கும் ஆசி கொடுத்து விட்டு
அக்கடான்னு அமர்ந்த போது
அடிவயிற்றில் பசி கிள்ளியது
அம்மனுக்கு.

வழக்கம் போலத் தேங்காய் பழம்
பிரசாதம் எல்லாவற்றையும்
சுருட்டிக் கொண்டு போயிருந்தான்
கடவுளைக்
கல் என்றே நம்பிய
பூசாரி.



*கவிஜி*

உதிர்க்கும் முன்
வண்ணங்களைப்
போர்த்திக் கொள்கின்றன...
நிறம் மாறாத பூக்கள் இருக்க
நிறம் மாறும் இலைகள்!
வெண்பனி கொட்டும்முன்
எங்களுக்கு
வண்ணமிகு காட்சி தந்து
மகிழ்வளிக்கும் மரங்கள்!
இலையுதிர்காலம்
இனிதாய் வரவேற்கிறோம்
துளிர்த்தலின் காலத்தினை
எதிர்நோக்கி!



**முனைவர்**

**கா. ந. கல்யாணசுந்தரம்**



# “ஹரிலால் த/பெ மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி” –

## நாவல்– ஒரு பார்வை

மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி என்பவர் வரலாற்றில் மகாத்மா என்றானார். மகாத்மா என்றால் மக்கள் மனத்தில் ஓர் அசைக்கமுடியாத பிம்பம் ஏற்பட்டுள்ளது. மகாத்மா என்றால் நல்லவர், ஒழுக்க சீலர், தியாகி என்பதையும் தாண்டித் தனிப்பட்ட வாழ்விலும் சில நெறிகளைத் தவறாது கடைபிடித்தவர். காந்தி ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்.

காந்தியை தன் வாழ்வைப் பற்றிச் சத்திய சோதனை என்னும் ஒரு சுயசரிதையை எழுதியவர். காந்தியைப் பற்றியும் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. காந்தியும் பல நூல்கள் எழுதியுள்ளார். காந்தியின் வரலாறை நாடறியும். ஓர் எழுத்தாளர் எழுதியதை விட அதிகம் எழுதியவர் என்னும் ஒரு குறிப்பும் உண்டு.

மகாத்மா காந்தியின் குடும்ப வாழ்க்கைக் குறித்தும் வரலாறுகள் உண்டு. மகாத்மா காந்திக்கு ஹரிலால், மணிலால், ராம்தாஸ், தேவதாஸ் என்று நான்கு மகன்கள். காந்தியின் சேவா எண்ணங்கள் கொண்டவராக மணிலால் வளர்ந்தார். அரசியல் ஈடுபாடு கொண்டவராக ராம்தாஸ் திகழ்ந்தார். தர்க்கமும் தெளிந்த சிந்தனையும் படைத்தவராகத் தேவதாஸ் இருந்தார். இவர்கள் மூவருமே காந்தியின் நேரடிப் பார்வையில் வளர்க்கப்பட்டவர்கள்.

மூத்தவரான ஹரிலால் தென்னாப்பிரிக்காவில் காந்தி இருந்த போது இந்தியாவில் வளர்ந்தவர். இதனால், ஹரிலாலின் நடவடிக்கைகள் அனைத்துமே காந்தியத்துக்கு எதிர்ப்பதமாகவே இருந்தன.

காந்தியின் மரணத்தின்போது எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு, ஹரிலாலின் வாழ்க்கை மிக மோசமானது.

ஹரிலால் காந்திய சிந்தனைக்கு, செயல்பாட்டுக்கு, கொள்கைக்கு, குணத்துக்கு நேர் எதிரானவர். காந்தி எதையெல்லாம் தீயது, கெட்டது என ஒதுக்கினாரோ அதையெல்லாம் செய்தவர். காந்தியின் வாரிசா, காந்திக்கு இப்படி ஒரு வாரிசா என ஆச்சரியப்பட வைத்தவர்.



## ஹரிலால் காந்தி

ஹரிலால் காந்தி குறித்து அறியச் செய்துள்ளார் தி இந்துவில் ' மரணம் ஒரு கலை ' யில் கவிஞர் அ. வெண்ணிலா. மகாத்மாவிற்கு நேர் எதிராக ஹரிலால் இருந்துள்ளதைத் தெரிவித்துள்ளார். ஒரு தேசத் தந்தை ஹரிலாலுக்கு ஒரு மோசத் தந்தையாகக் காந்தி இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு வகையில் ஹரிலால் காந்தி மீது அனுதாபம் ஏற்படவேச் செய்கிறது. ஹரிலாலின் மரணமே அவருக்கு விடுதலைப் பெற்றுத் தந்ததாக் குறிப்பிடுகிறார். அ. வெண்ணிலா எழுதியது ஹரிலால் குறித்த ஒரு கட்டுரை.

காந்தியை வைத்துப் பல சிறுகதைகளை எழுதிய எழுத்தாளர் கலைச்செல்வி காந்தியின் மூத்த மகன் ஹரிலால் குறித்து ஒரு சிறுகதை எழுதும் முயற்சியில் ஈடுபட்டு தரவுகளைத் திரட்டி வாசித்து எழுதத் தொடங்கிய போது ஒரு நாவலாக நீடித்துள்ளது. நாவலின் தலைப்பே ' ஹரிலால் த/பெ மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி'. இது முதல் பாகம். இரண்டாம் பாகமாகத் தேய்புரி பழங்கயிறு என்னும் தலைப்பில் வெளிவருகிறது. இந்திய வருகைக்கு முன் என முதல் பாகம் அமைந்துள்ளது. காந்தியின் இந்திய வருகைக்குப் பின்னானதாக இருக்கும் இரண்டாம் பாகம். ஹரிலால் என்னும் இத்தொகுப்பு பரவலாகப் பேசப்பட்டது. தமிழ் இந்து திசை கவனிக்க வேண்டிய நூல் எனக் கவனத்தை ஈர்த்தது. பேசப்பட்டும் வருகிறது. காந்தியின் வாழ்வில் நடந்தவைகளையே படம் பிடித்துக் காட்டியுள்ளார். கணவனுக்கும் மகனுக்கும் இடையில் கஸ்தூரிபாயை ஒரு சிறந்த தாயாகப் படைத்துள்ளார். கஸ்தூர்பாய் அளவிற்கு மகன் ஹரிலாலை காந்தி அறிந்திருக்கவில்லை. காந்திக்கும் ஹரிலாலுக்குமான இடைவெளியே ஹரிலாலை காந்திக்கு எதிராகவும் காந்தியின் நடவடிக்கைகளுக்கு மாறாகவும் மாற்றியது என நாவல் குறிக்கிறது.

ஒரு தேசத்தந்தையாக வெற்றிப்பெற்ற காந்தி ஒரு குடும்பத்தந்தையாக தோற்றுப் போனதை நாவல் விவரிக்கிறது.

காந்தி தன்னிடமிருந்து துரத்திவிட்ட அனைத்தும் ஹரிலாலாக மாறி அவர் முன் வந்து நின்று அவரைச் சவாலுக்கு அழைத்தன.'நீ மகாத்மா என்றால் என்னை வென்று செல்!' என்றன.



## தேவதாஸ் காந்தி

காந்தி தன் வாழ்க்கையில் எதிர்கொண்ட ஆகப்பெரிய சோதனையே ஹரிலால்தான். ஹரிலால் மீது அவர் பெரும்பாசம் கொண்டிருந்தார் என தேவதாஸ் காந்தி எழுதினார். 'தனது அரிய நகை' என ஓர் இடத்தில் காந்தி ஹரிலாலைச் சொல்லியிருக்கிறார். காந்தியின் ஆத்மாவின் இறங்கிய கட்டாரி போன்றவர் ஹரிலால். தன் கண்ணீரால், தவத்தால் அந்தக் காயத்தை ஆற்றிக்கொண்டு எழுந்தார் காந்தி. இந்த நாட்டுக்காகக் காந்தி செய்த மாபெரும் தியாகத்திற்கு அவர் ஹரிலாலை விலையாகக் கொடுத்தார் என்றுகூடச் சொல்லலாம்.


' ஆசைக்கும் கோபத்துக்கும் அடிமையாக இருப்பவன் இனம்புரியாத வெறியுணர்ச்சிக்கு விரைவில் அடிமையாகிவிடுகிறான். ஹரிலாலின் மொத்த வாழ்க்கையும் இந்த இரு வரிகளிடையில் மறைந்திருப்பதை உய்த்துணரும் வகையில் அமைத்திருக்கும்

கலைச்செல்வி பாராட்டுக்குரியவர். சில ஆண்டுகளுக்கு முன்பாகச் சி.சு.செல்லப்பா சுதந்திரப் போராட்ட காலத்தைப் பின்னணியாகக் கொண்டு 'சுதந்திர தாகம்' என்ற நாவலை எழுதினார். அதில் காந்தியடிகளைப் பற்றிய பல தகவல்களை, பாத்திரங்களுடைய உரையாடல்களின் வழியாக அறிந்துகொள்ளலாம். இப்போது, காந்தியடிகளையே ஒரு முக்கியமான கதைப்பாத்திரமாகக் கொண்டு இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது. சிறப்பான தமிழ் நாவல் வரிசையில் கலைச்செல்வியின் இந்நாவலுக்கும் இடமுண்டு' என எழுத்தாளர் பாவண்ணன் நாவல்குறித்து எழுதியுள்ளார்.

இருவரின் கருத்தும் நாவலை வாசிக்கத் தூண்டுகிறது. வாசித்தபின் கருத்து உண்மையேயெனக் கருதத் தோன்றுகிறது.

சமூக நாவல்களை எழுதி வந்த எழுத்தாளர் கலைச்செல்வி வரலாறு நாவல் எழுதுவதில் வெற்றிப்பெற்றுள்ளார் என்பதைக் காட்டுகிறது ஹரிலால் த/பெ மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி. அவசியம் வாசிக்க வேண்டிய ஒரு நாவல்.

**வெளியீடு ;**
**தன்னறம் நூல்வெளி**
**கிருஷ்ணகிரி.**



*பொன். குமார்*



தயங்கும் உறக்கம்!
கணினி வழி
பொழிகிறது
தரவுகளின் பட்டியல்!

புள்ளி விவரங்கள் சேமித்து
கைபேசியில்
செய்தி பரிமாற்றும்
புலன செயலி
வாயிலில் நுழைந்து
வருடி அனுப்பப்படும்
தகவல்கள்!

பெறப்படுபவைகளின்
தரவிறக்கம் தொடர
நீள் பகல்களின்
வெளி கிட்டா வீதிகளில்
வெளிறியபடி கடக்கும்
நாளின் நகர்தல்!

முழு
நுணுக்கமறியா
இயல்பு நிலைகளைக்
கடந்தபடி
சில
பட்டும் படாமலும்!

பல கடமைகளின்
அழுத்த விவரங்கள்
வீடு நுழைய
கனமேறி நிற்கும்!

குவிந்து விட்டவைகளை
கூட்டித்தள்ள முடியாமல்
சுமந்து கொண்ட
பாரங்களில்
உதிரும் சிறகுகள்!

சுட்டெரித்து
சாம்பலாக்கப்பார்த்த
பகலின்
நெரிசல் விலகி
இருள் கவிகையில்
கவிதைகள்
வர மறுக்க
பிடிவாதமாய்ப்படிகளில்
தயங்கியபடி நிற்கிறது
உள் நுழையா
உறக்கமொன்று!

**S.மகேஷ்**
சென்னை

# கட்டாக்காலி



சூரியனின் வெளிச்சம் உச்சத்தைத் தொடும் மத்தியானப் பொழுதில் பனிமலர் தனது வீட்டில் அமர்ந்து துவரம்பருப்பைக் கைபார்த்துக் கொண்டிருந்தாள். அதிலிருக்கும் வண்டுகளைப் புடைக்க முடியாமல் அவற்றைக் கையால் எடுத்தால் அது மனிதனைப் போல மயக்கமிடுவதும் கீழே போட்டவுடன் கொஞ்ச நேரத்தில் எழுந்து ஓடிவிடும் அதன் நேர்த்தியைக் கண்டு வியந்துபோனாள். வண்டிற்குக் கூடக் கடவுள் எவ்வளவு அறிவைக் கொடுத்திருக்கிறார்? ஏன் மனிதனுக்கு ஆறறிவு இருந்தும் இப்படியிருக்கிறான் என தனக்குத்தானே மனதிற்குள் வினவிக்கொண்டாள்.

இந்த மனுசன் எங்கே போனார்? ஆபிசில் நாளைக்கு மீட்டிங் என்றுதானே சொன்னார். இன்றைக்கு ஆளக் காணோமே... என்று வாசலைப் பார்த்தவளுக்கு செழியன் வரவில்லை என்றவுடன் மனதினுள் எழுந்த கோபம் கிர்ரென்று உச்சியில் ஏறியது. மனுசன் வாரத்தில் மூனுநாளாவது எங்காவது போகவிட்டால் சிந்துபைரவி படத்தில் தனக்குத் தெரிந்ததைப் பிறரிடம் சொல்லாவிட்டால் ஜனகராஜ் தலைவிரிவதுபோல இவருக்கும் தலைவெடித்துவிடுமோ என்று எண்ணியவாறே சரி சாப்பிடுவோம் என்று எழுந்து அடுக்களைக்குப் போனாள்.

செழியனுக்கும் பனிமலருக்கும் திருமணமாகி ஏழாண்டுகள் ஆகிவிட்டது. இருப்பினும் மனைவியிடம் சொல்லாமல் தனது உறவினர் வீட்டுக்கோ, நண்பர்களுடன் வெளியூர்களுக்கோ சென்றுவிடும் செழியனின் போக்கு மாறவில்லை. செழியனின் ஆச்சி திருமணமான புதிதிலேயே பனிமலரை எச்சரித்தாள்.

“அவன், அவங்க அப்பா, அம்மா மாதிரி வாரத்துல பாதிநாள் ஊரைச்சுத்திக்கிட்டே திரிவான். நீதான் அவனை அடக்கி வைக்கணும். உன் மாமனார், மாமியார் ரெண்டுபேரும் கவர்மெண்ட் சம்பாத்தியம் அவங்களுக்குக் கவலையில்ல. நீங்க அப்படிக் கிடையாது”

பனிமலருக்குத் திருமணமான புதிதிலேயே செழியனிடம் கடிந்து சொல்லமுடியவில்லை. கொஞ்ச நாள் கழித்து அவரிடம் பேசிச் சரிசெய்யலாம் என்று காத்திருந்தாள். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவன் குணமே அப்படித்தான் யார் பேச்சையும் கேட்கமாட்டான் என்பது பிடிபட்டுப்போயிற்று. செழியனிடம் எங்கு சென்றாலும் என்னிடம் சொல்லிவிட்டுச் செல்லவேண்டும் என்று பனிமலர் சொன்னாலும் அவன் அதை ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. சண்டை போட்டால் என்றால் ஒரு வாரத்திற்குப் பேசாமல் தான்தோன்றித்தனமாய்த் திரிவான்.

“யாரையும் அண்டாதீங்க. நமக்குன்னு நாலுபேர் வேண்டாமா? இப்படியே இருங்க”

என்று பேசி அவள் வாயை அடைத்துவிடுவான். அவளிடம் பேசவேண்டிய விசயங்களைக்கூட அவள் மகள் மலர்விழியிடம் கைபேசியில் சொல்ல, குழந்தை “சரிப்பா” என்று சொல்லி வைத்துவிடும். வீட்டிற்கு வந்தபிறகு கேட்டால் “நான்தான் தகவல் சொன்னேனே” என்று நழுவும் செழியனின் குணங்கள் அவர்களுக்குள் வெறுப்பையும் விரிசலையும் ஏற்படுத்தின. முந்தைய தலைமுறையிடம் இருந்த அன்னியோன்யம் இல்லாமல் போனது.

அவன் வாங்குகிற சம்பளத்தில் பாதி போக்குவரத்துக்குச் செலவானது. மீதி சம்பளத்தில்தான் குடும்பத்தை ஓட்டவேண்டும். பிள்ளைகள் பெரிசாக ஆரம்பிக்கும் முன் ஏதாவது மிச்சம்பிடித்தால்தான் சேமிப்பு என்று ஏதாவது கையில் மிச்சமிருக்கும். இதை எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அவனுக்குப் புரிவதில்லை. ஒரு நாள் உடல்நிலை சரியில்லாமல் காய்ச்சலில் உணவும் உண்ணாமல் கிடந்தாள். அதைப் பற்றிய எந்த அக்கறையும் இல்லாது செழியன் ஊர்சுற்றக் கிளம்பிவிட்டான். இரவு வீட்டிற்கு வந்து சாப்டியா என்றுகூடக் கேட்காமல் மலர்விழியிடம் வந்து “அம்மா சாப்டாளா?” என்று கேட்டான். இதைக் கவனித்த பனிமலர்,



“ஏன் இருக்கனா? செத்தனா என்று பார்க்கவந்தீர்களா?” என்று கேட்டாள்.

“இதற்குத்தான் உங்கிட்ட பேசறதே இல்ல. எது சொன்னாலும் எசலிக்கிட்டே இருக்க” என்று செழியன் பதில் கூற,

“ஆமா காலையிலேர்ந்து காய்ச்சல்ல கிடக்கேன். மாத்திரை வாங்கிக் கொடுக்க, ஒரு வார்த்தை சாப்டியா? என்று கேட்க மனசு வரமாட்டேங்குது. வருசம்பூரா உங்களுக்குச் சமைச்சுக்கொட்ட, துணிதுவைச்சுப் போட, பிள்ளைகளைப் பார்க்க மட்டும் வேலைக்காரி மாதிரி நான் இருக்கனும். எதுவுமே பேசக்கூடாது. நீங்க என்ன செஞ்சாலும் ஊமையா வாயமூடி இருக்கனும்” என்றாள்.

“ஆரம்பிச்சுட்டா” என்று சலித்துக்கொண்டே கடந்து போனவனைப் பார்த்துத் தன்னையும் மீறி எட்டிப்பார்த்த கண்ணீரைச் சேலையில் துடைத்தாள். உடல்நிலையோடு மனநிலையும் சேர்ந்து வீணாய்ப்போனது.

செழியனைப் பற்றிய ஒரே ஆறுதல் பிள்ளைகளிடம் கொஞ்சம் அக்கறையாகவும் அன்பாகவும் இருப்பான். தன்னிடம் பிரியமில்லாவிட்டாலும் பிள்ளைகளிடம் அன்பாகத்தானே இருக்கிறான் என்று தன் மனதிற்குள் ஆறுதல் பட்டுக்கொள்வாள் பனிமலர்.

நாளடைவில் எதிர்பார்ப்புகள் இருக்கப் போய்த்தானே மனது வலிக்கிறது. எதிர்பார்ப்பைக் குறைத்துக்கொண்டு பிள்ளைகளுக்காக வாழப் பழகிக் கொள்வோம் என்று விட்டேத்தியாக இருக்கத்தொடங்கிவிட்டாள்.


சரியாகச் சாப்பிடுவது கூடக்குறைந்து போனது பனிமலருக்கு. மனதின் இறுக்கம் தந்த வேதனை அவளது உடம்பையும் இளைக்கச் செய்தது. சங்க இலக்கியத்தில் தலைவனை நினைத்துத் தலைவி மெலிவதால் கைவளையல்கள் கழன்று மேனியில் பசலைபடரும் என்று படித்திருக்கிறாள். அது அன்பின் வெளிப்பாடு. ஆனால் இவளுக்கு அவனால் ஏற்பட்ட மனவேதனையிலும் விரக்தியிலும் உடல்மெலிகிறது. இதை யாரிடம் போய்ச் சொல்வது?

செழியனுக்கும் அவளுக்கும் ஏற்பட்ட சண்டையில் ஒரு நாள் கோபத்தின் உச்சமாய் பனிமலர் என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டில் இருந்த பினாயிலை எடுத்துக்குடித்துவிட்டாள். குடித்தபிறகு அவள் உடலும் மனமும் படபடத்தது. பிள்ளைகள் இருவரும் தனக்கு ஏதாவது நேர்ந்தால் அநாதையாகி விடுவார்கள், அந்தப் பிஞ்சு முகங்கள் இரண்டும் மனதில் வந்து அவளை நிலைகுலைய வைத்தன. வேறுவழியின்றி உண்மையைச் செழியனிடம் சொன்னாள்.பதறிப்போய் செழியன் உள்ளூர் மருத்துவமனையில் சேர்க்க, அத்தனையும் வாந்தியெடுக்கச் செய்தனர். அப்பொழுதும் வீணாய்ப்போனது பனிமலரின் உடலும் மனமும் தான். அந்தநேரம் பனிமலருக்குச் சமாதானம் சொன்னாலும், கட்டாக்காலி மாடு போல இன்னும் செழியன் வேலைசெய்யும் நேரம்போக, மற்ற எல்லா நேரமும் ஊர்சுற்றிக் கொண்டிருக்கிறான்.



- சுந்தரிமணியன்
புதூர்

# அன்பே
# நமது
# வாழ்வியலாம்!



அன்பே என்றும் உலகாளும்
.... அறிவோம் தெளிவாய் உணர்ந்திடுவோம்!
அன்பே மாந்தர் ஆயுதமாம்!
.... அகிலம் தன்னை வென்றிடலாம்! அன்பின் வழியே உயிர்நிலையாம்!
.... அகத்தில் நிறைவை உண்டாக்கும்! அன்பே கடவுள் என்பாரே!
.... அனைத்து மதமும் உணர்த்திடுமே!

மனிதம் மலரும் அன்பாலே!
.... மக்கள் உணர்வர் செயலாலே! கனிவாய்க் கருணை குணம்கொண்டால்
.... களிப்பாய் உறவும் வலுப்படுமே! இனிமைச் சொற்கள் பிறந்திடுமே!
.... இயல்பாய் நட்பும் கூடிடுமே!
பனியாய் விலகும் துயரங்கள்!
.... பகிர்வோம் அன்பைப் பிறருடனே!

வறியோர் துன்பம் போக்கிடுமே!
.... வழியும் கண்ணீர் துடைத்திடுமே! நெறியாய் நடப்போம் அன்புவழி
.... நெகிழும் உள்ளம் நமதென்றே! சிறியோர் பெரியோர் பேதமின்றிச்
.... சீராய் அன்பைச் செலுத்திடுவோம்! அறிவோம் முன்னோர் கூற்றுகளை
.... அன்பே நமது வாழ்வியலாம்!

**முனைவர் ஒசூர் மணிமேகலை**



கொலைவெறித் தாக்குதல்களில்
அலைபேசிகள்....
தொலைந்து போயின
தொலைபேசிகள்...
தொலை தூரமாய்!

கச்சிதமாய் சிறகு விரித்து
உணர்வு கடத்திய
கடிதப்புறாக்களை....
குறுஞ்செய்திகளென விரிந்து
குத்திக் கிழித்தன  கண்களை  ...

திமிங்கிலமாய் விழுங்கின
திரையரங்குகளை.....
தொலைக்காட்சிகளையும்
சுவைத்தன ஊறுகாயென...

கசக்கி எறியப்பட்டன
கைக்கடிகாரங்கள்
காணாமற்போயின
கால்குலேட்டர்கள் ...

நூலகங்களைக் கொறிக்கத் தொடங்கிய
நுனிப்பற்களைக் கடந்து
நூதனமாய் மாட்டி மடிந்தன
கடவாய் பற்களில் காமிராக்களும் ...

வர்த்தகங்களில் வாய் கிழிக்க
தொடங்கி வாழ்க்கையிலும்
வாலாட்டிக் கொண்டிருக்கிறது அது ...

ஜோசியம் பார்ப்பதையும்
விட்டு வைக்கவில்லை...
காசுகளைக் களவாடிக் கொண்டிருக்கிறது...
காகிதம் பொறுக்குவோரின்
சட்டை பைகளில் இருந்தும்
திட்டம் தீட்டியபடியே...!

–





கடம்பத்தூர் கவியரசன்

நம்மைச் சுற்றி ஆசான்கள்........
அடக்கத்தின் அளவில்லா அமைதியை
ஆழ்கடலிடம் அறிந்து கொள்..
வீழ்ந்தாலும் எழுந்தோடும் விந்தையை
நீர்வீழ்ச்சியிடம் கேட்டுக் கொள்....
புதைத்தாலும் உயிர்பெறும் விந்தையை
பூவுலக விதையிடம் கற்றுக் கொள்....
சுயநலமில்லா பொதுநலத்தை விண்ணுலக
விசும்பின் துளியிடம் விசாரித்துக் கொள் ...
பகிர்ந்துண்ணும் பக்குவத்தைக் கரையும்
காகத்திடம் கற்றுக் கொள்....
மகிழ்ந்திருக்கும் மகத்துவத்தை மேதினிவாழ்
மழலையிடம் கண்டு கொள்......
மீண்டெழும் விந்தையை வெட்டியும் துளிர்விடும்

மரத்திடம் அறிந்து கொள் ...
தடைகளைத் தாண்டி ஓடிடும் தன்மையை
பாய்ந்தோடிடும் ஆற்றிடம் அளாவிக் கொள் ...
பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சை
பாரினில் வாழ் சான்றோரிடம் அறிந்து கொள்...
நம்மைச் சுற்றி ஆசான்கள்
நாளும் நன்றே கற்பிப்பர்
நலமுடன் உய்யும்வழி பாரீர்...

**ம.அமிர்தா தமிழரசன்,**
**தேனி.**

# அந்திச் சிவப்பும் ...
# அத்திப்பழமும்...

மோகத்தின் முட்களெல்லாம் சேர்ந்து
ரோஜாவாய் மலர்ந்து
கிடக்கிறது
அவள் முகமெங்கும்!

வேல்களை சூல்கொண்டு
காத்துக்கிடக்கின்றன
சமயம் பார்த்துச்
சரமாரியாக எய்ய
அவள் கருவிழிகள்!


அலையலையாய்ப்
புரண்டு அண்மிக்கின்றன
ரோஜாத் தோட்டத்தை
அவள் சுருள் குழல்கள்!

ராஜகம்பீரத்துடன்
மின்னிச் சிரிக்கிறது
அவள் நாசி துளைத்த
செருக்கோடு
மூக்குத்தி வளையல்!



இத்தனை அழகையும்
தோற்று விழ வைக்கிறது
அந்திச்சிவப்பும்
அத்திப்பழமும் கலந்து
ஏந்திய அவள்
வதனத்தின் குறுநகை!

**Dr.ஜலீலா முஸம்மில்,**
ஏறாவூர்,
இலங்கை



பேரா. மு. தனஞ்செழியன்
கோவில்பட்டி

## சமூக அக்கறையில்

# தாழையாரின் சிறுகதைகள்

தமிழ்ச் சிறுகதைகளுக்கென்று ஒரு அடையாளமும், அரசியல் வரலாறு உண்டு. மேனாட்டார்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்தப் படைப்பிலக்கியமானது, ஆரம்ப காலங்களில் சமூகக் கட்டமைப்பில் கல்வி கிடைத்த மத்தியதர வர்க்கத்தினரால் மட்டுமே கையாளப்பட்டது. வெகுசமீப காலமாகத்தான், சமூகத்தின் பின்தங்கிய சூழலிலிருந்த மக்களால் எழுதப்பட்ட, அம்மக்களின் வாழ்வியலைப் பற்றிய கதைகள் தமிழ் இலக்கிய உலகில் வெளிவரத் தொடங்கின.

தாழை. இரா. உதயநேசன் அவர்களின் கதைகளும், அச்சமூகத்தாரால் சூழப்பட்ட மக்களின் வாழ்வியலைப் பின்னணியாகக் கொண்ட சிறுகதைகளாக இருக்கின்றன.அவற்றில் 'செவத்த இலைத்' தொகுப்பு அவ்வாழ்வியலைத் தனித்தனிப் படங்களாக்கி இருக்கின்றன.

இத்தொகுப்பில் இருக்கும் முப்பது கதைகளும், வாசகர்களுக்கு எளிமையானதாகவும், செறிவூட்டப்பட்ட குறுங்கதை வடிவங்களாகவும் அமைந்திருக்கின்றன .

'நள்ளிரவில் தூக்கம் வராமல் விழித்துக்கொண்டிருந்தான் கோகுல்நாத்.

அப்படியே தூங்கினாலும் கனவில் தோன்றும் அந்தக் கண்களைக் கடந்து போகாமல் விழித்துக் கொள்வான்' எனத் தொடங்கும் அந்தக் கண்கள் சிறுகதை, எதிர்பாராமல் வருகிற காதல். இப்படி இளவட்டங்களின் மன ஓட்டங்களையும் கண்கள் வாயிலாகவும் புரிந்து தங்களின் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள் என்பதான ஒரு சுவாரசியம் நிறைந்த குறுங்கதையாக அந்தக் கண்கள் கதை அமைந்திருக்கும்.

அந்தக்கண்கள் சிறுகதையில், சமூகம் சார்ந்த சிந்தனைகளைப் படைப்பாளர் அதில் வெளிப்படுத்தி இருப்பார். மதம் கடந்த திருமணம் ஒன்று இக்கதையில் நடக்கும்.

மதநல்லிணக்கத்தைப்பேணும்வகையில் செவத்தஇலை சிறுகதைத் தொகுப்பின் முதல் சிறுகதை அமைந்திருப்பது சமூகத்தின் மீது கொண்டுள்ள அக்கறையையும் பொறுப்புணர்ச்சியையும் பறைசாற்றுகின்றன.

உடல்மீதும், ஆரோக்கியத்தின் மீதும் அக்கறை இழந்த சமூகத்தினரால் தான், இன்று நாடு முழுவதும் கருத்தரிப்பு மையங்கள் உள்ளன. 'எதிர்பாராத பரிசு' சிறுகதை குழந்தையின்மையைப் பற்றிப் பேசுகிறது. இந்தச் சமூகம், அதற்குக் காரணமாக எப்பொழுதும் பெண்களைத் தான் சுட்டிக் காட்டுகிறது.

குணவதிக்குக் குடும்ப உறுப்பினர்களால் தொல்லைகள் ஏற்படும்போதெல்லாம் ஆனந்தன் அவளுக்கு உறுதுணையாக நின்று, தான் ஒரு சரியான இணை என்பதனை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டே இருக்கிறார். குறைகளின் மீது விமர்சனம் செய்யும் மக்கள், அதன் மீது உள்ள அன்பையும், காதலையும் மதிப்பதே இல்லை.

உழைக்கும் மக்களின் ஏக்கம், எப்போதும் நிறைவேறுவதே இல்லை என்பதை 'ஏக்கம்' என்கிற சிறுகதை நமக்குத் தெளிவாக வெளிப்படுகிறது. கண்ணம்மாவிற்குப் பானை உடையும் பொழுதெல்லாம் பானைகள் உடைந்ததையும் தனக்கு அடிபட்டு வலிக்கும் வேதனையை விடவும், தன் பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தர முடியாமல் போய் விட்டதே என்று வேதனைப் படும் ஒரு உழைக்கும் வர்க்கத்தின் தாய் உள்ளத்தையும் இக்கதை சுமந்து கொண்டிருக்கிறது.

சிறுகதைகள் குறித்து உலகின் தலைசிறந்த எழுத்தாளர் "ஏட்கர் ஆலன் போ" ( Edgar Allan Poe ) கூறும்பொழுது. 'ஒரு சிறுகதைக்கு ஒற்றை மனநிலை இருக்க வேண்டும், ஒவ்வொரு வாக்கியமும் அதை நோக்கிக் கட்டமைக்க வேண்டும்.' எனக் குறிப்பிட்டிருப்பார். படைப்பாளர் உதயநேசன் அவர்களின் சிறுகதைகளும் ஒற்றைச் சிந்தனையைச் சுற்றி எழுப்பப்பட்ட சிறு சிறு குடிசைகளாகச் சிறுகதைகள் அமைந்துள்ளன. அதன் கட்டமைப்புகள், உள்ளார்ந்த தன்மையை வெளிப்படுத்துகின்றன..

மாந்தோப்புக் கிராமத்தில் ஏற்படும் தண்ணீர் பிரச்சனையும் அதை ஊரில் இருக்கும் சிறுவன் குமார் எப்படி புத்திசாலித்தனமாக அணுகுகிறார் என்பதையும் 'சபாஷ் தம்பி' சிறுகதை நமக்கு வெளிப்படுத்துகிறது.

'ஏ.. பச்சம்மா... வா..வா... ஆட்டத் தேடி வந்தியா... இல்ல.. வூட்டுக்காரனத் தேடி வந்தியா... எப்புடியோ.. சரியான நேரத்துக்குத் தான் வந்துருக்க. ரெண்டாயிரம் ரூபா கொடுத்துட்டு, ஆட்டையும், உம் புருசனையும்

கூட்டிட்டுப் போ. ஆனா, உம் புருசன ரேஞ்சர் கூட அனுப்பி வச்சுட்டேன். டவுனுக்குப் போயி அபராதம் கட்டிட்டு கூட்டிட்டு வா... ஆனா, ஆடுகள விடமாட்டேன். ரெண்டாயிரம் கொடு. இல்லனா...' என்று சொன்ன அதிகாரி, பச்சம்மாவின் புடவையைப் பிடித்து மூர்க்கமாய் இழுத்தான். நிலைதடுமாறிய பச்சம்மா, அருகில் இருந்த பச்சை இலை தழைகளின் மேல் விழுந்தாள். அவள்மீது பாய்ந்த அதிகாரி, அம்மா.. எனக் கத்திக்கொண்டே கீழே விழுந்தான். அவன் கழுத்து அறுபட்டு, இரத்தமெல்லாம் அந்தப் பச்சையிலைகளின் மேல் வடிந்துக்கொண்டிருந்தது. அதிகாரி கழுத்திலிருந்து தொரட்டி அரிவாளைப் பிடுங்கி எடுத்தாள் பச்சம்மா. இன்னும் இரத்தம் பீறிட்டு வந்தது. இலைகள் முழுவதும் இரத்தமாயிருந்தது.

பச்சம்மா ஆடுகளை ஒட்டிக்கொண்டு ஆற்றுக்கு வந்தாள். மழைத்தண்ணீரும் சேர்ந்து வந்துக்கொண்டிருந்தது. வழக்கமாக, பச்சம்மா முன்னே செல்ல ஆடுகள் அவள் பின்னே போகும். ஆனால், இப்போது அதிகமானத் தண்ணீரைக் கண்ட ஆடுகள் அவள் பிறகே வருவதும் கரைக்குச் செல்வதுமாக இருந்தன. பச்சம்மா குட்டி ஆடுகளைக் கைகளில் தூக்கிக்கொண்டு, 'செல்லங்களா... பயப்படாதீங்க.. அம்மா இருக்கேன். திரும்பி என்கூட வந்துடுங்க...' எனக் கெஞ்சிக்கொண்டிருந்தாள். அப்போது ஒரு பெரிய மின்னலடிக்கவே, ஆடுகள் எல்லாம் அவளிடம் வந்து ஒட்டிக்கொண்டன. ஆடுகளோடு வீடு வந்து சேர்ந்தாள் பச்சம்மா.

மறுநாள், அபராதம் செலுத்தி, தன்னுடைய புருசனை அழைத்து வருவதற்காகப் பானையிலிருந்து நகைகளை எடுத்து வைத்தாள் அந்தக் கற்புக்கரசி..!!! (செவத்த இலை சிறுகதை)

தமிழ்ப்பெண்கள் என்றால், வீரம் நிறைந்தவர்கள் என முன்னோர்கள் ஏதோ சொல்லுக்குச் சொல்லி வைக்கவில்லை என்பதனைப் பச்சையம்மா கதையின் வாயிலாக நிரூபித்து விட்டாள்.

ஆண் சமூகத்தினால் எப்பொழுதுமே சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்பை அவர்களின் கற்பு மீதான விமர்சனத்தையும் இக்கதை முழுவதுமாகப் பலவீனப்படுத்தி விடுகிறது. பச்சையம்மாவை அடையத் துடிக்கும் காவல் அதிகாரியைத் தைரியமாக எதிர்கொண்டு கொலைப் பாதகச் செயலிலும் ஈடுபட்டாள் பச்சையம்மா. செவத்த இலை சிறுகதை தொகுப்பின் முக்கியமான சிறுகதை என்று நமக்கு மீண்டும் நிரூபித்திருக்கிறது. இப்படியான அபாரமான வீரம் நிறைந்த கதைகள் தமிழ்ப் பெண்களுக்கு மட்டுமல்லாது வாசிக்கும் எந்தப் பெண்களுக்கும் தன் மீது ஏவப்படும் பாலியல் துன்பங்களையும் மற்றும் சமூக இடையூறுகளையும் எதிர்கொள்ளும் தைரியமும் அவர்களுக்கு வழங்கும் என்பதனைப் பூர்த்தி செய்கிறது இச்சிறுகதை.

தியாகி கதை, சிதம்பரநாதனுக்குக் கிடைக்காத ஓய்வூதியம் அதிகாரி மேல் தக்க நடவடிக்கை மூலமாகக் கிடைக்கப்பெறுவதை, இந்தச் சமூகத்தின் மீதும் அரசின் மீதான ஆசிரியரின் நேரடி விமர்சனமாகவே நம்மால் அதைப் பார்க்க முடிகிறது.

நீட் தேர்வால் ஆண்டுதோறும் பல உயிரிழப்புகள் தமிழ்நாட்டில் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.. அப்படியான நுழைவுத்தேர்வு பற்றிய

ஒரு கதையை 'மனதில் உறுதி வேண்டும்' தேர்வு நேரங்களிலும் தேர்வை எப்படி எதிர்கொள்வது மற்றும் பெற்றோர்கள் அதற்கான ஒத்துழைப்பை எவ்வாறு வழங்க வேண்டும் என்பதனைப் பற்றியான ஒரு அக்கறை நிறைந்த சிறுகதையாகவே அமைந்து உள்ளது..

இன்று வரையிலும் பெண்கள் தாங்கள் பணிபுரியும் இடங்களில் பாதுகாப்பாக உள்ளார்கள் என்று ஒரு ஆய்வின் அடிப்படையில் 60% பெண்கள், பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு பெரிய நிறுவனத்தில் இருக்கும் உயர் அதிகாரி அதில் பணிபுரியும் பணிப்பெண்களைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தி வர,. அதில் பணிபுரியும் குமுதா என்னும் பெண் அதை எப்படித் தைரியமாக எதிர்கொள்கிறார். அதைச் சட்டரீதியான போராட்டங்களுக்குப் பின்னால் சரியான தண்டனையையும் அந்த உயர் அதிகாரிக்கு வாங்கி தருகிறாள், எனும் கதையோட்டம் பெண்களுக்குத் தைரியம் உண்டாகும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

மூடநம்பிக்கையாலும், மதப்பற்றாலும் மூழ்கிப் போயிருக்கும் சமூகத்தினரிடையே பிள்ளை இல்லாத பாக்கியத்தைப் போக்கிக் கொள்ள சாமியாரைத் தேடிச் செல்லும் தம்பதிகள். சாமியார் தன்னுடைய மனைவியைப் பாலியல் பலாத்காரம் செய்வது தெரிந்து அவளைக் காப்பாற்றத் துடிக்கும் கணவன், என மூடநம்பிக்கையின் போக்குகளுக்கு ஆசிரியர் உதயநேசன் சவுக்கடி கொடுத்திருக்கிறார்.

கடந்த இரண்டாண்டுகளாக உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பால் பல உயிரிழப்புகள் நடந்தன.. பொதுமக்களின் உயிரிழப்புகளுடன் சேர்த்து அதில் நோய்க்காகப் பணியாற்றிய மருத்துவர்களின் உயிரிழப்புக்களும் அதிகமாகவே தான் இருந்தன. பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பான மிகவும் இறுக்கமான ஒரு கதை தான் 'வெண்மேகம் அழுகிறது '. மருத்துவராகப் பணிபுரியும் அகிலா சாமிநாதன் கொரோனாவாடில் சிறப்பு மருத்துவராக இருப்பாள். அவர் பணிபுரிந்து கொண்டிருக்கும் சில நாட்களுக்குப் பின்னால் அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பலனின்றி அவரும் இறந்து விடுகிறாள். அது பேரதிர்ச்சியாகவும் அவரை நம்பியுள்ள அவருடைய குடும்பமும், குழந்தையும் அமுதாவின் ஆதரவுக்காக ஏங்குவதைக் கதையின் வாயிலாக நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் இத்தொகுப்பில் வழங்கப் பட்டிருக்கும் 30 கதைகளும் பல்வேறு சமூகச் சிக்கல்களையும், இன்னல்களையும் பற்றியதான ஒரு தொடர் பருந்து பார்வையைக் கதைகளின் வாயிலாகத் தாழை இரா. உதயநேசன் அவர்கள் வழங்கி உள்ளது மிகவும் சிறப்புடையதாகும்.

இந்தச் சிறுகதைத் தொகுப்பானது,. குடும்பம், காதல், சமூகம், சாதியம், மதம், சிறார்களுக்கான இலக்கியம். எனப் பன்முகத்தன்மைகள் அமைந்த ஒரு கூட்டுத் தொகுப்பாகவே பார்க்க முடிகிறது. இதில் ஆசிரியர் உதயநேசன் அவர்கள் எழுதாத வகைமையில்லையென நாம் சொல்ல முடியாத அளவிற்கு அவர் இந்தச் சமூகத்தின் மீதும் பேசப்பட வேண்டியவற்றையெல்லாம் சிறுகதைகளாக எழுதித் தொகுத்து தந்துள்ளார். .

தென்றல் காற்று கண்ணில் படாமல்
வீட்டுக் கதவை வீசித் திறப்பனெ
திருடன் சன்னல் வலைத்து திறப்பான்
இதயப் பூட்டின் சாவியே கவிகள்

*ஜெ. அண்ணாதுரை*

என் மனக்கதவு திறந்த போதும்
உன் விழிகள் பார்க்காமல் போனதேன்
உள்ளத்தைப் புரிந்துக் கொள் நீயே
நேசிக்கும் இதயம் யாசிக்கிறது அன்பே

*மியூரியல் ஜெயானந்தசாமி*

*இலங்கை*

கதிரவன் விலகிட மேகங்கள் தழுவிட/
காரிருள் சூழ்ந்து கடமைகள் தனித்திடும்/
ஒளியில் மிளிர்ந்து வெளிச்சம் பளிச்சிட/
மயங்கும் நெஞ்சமும் நிதானம் கொண்டிடும்/
வினைகள் செயலிட அருளும் கையூட்ட/
மனமும் ஆன்மீகத்தில் உணர்வை வகுத்திடும்/
மெய்யறிவு கண்டிட தன்னறிவு களிக்குமே

**டாக்டர் ராமா வைத்தி**

**பிரான்ஸ்**

## ஹைக்கூ.....

மாலை வெயில்,
தோகை விரித்தாடுது,
அழகு மயில்.

தொலைந்த உறவு,
வந்து போகும்,
அவள் நினைவு.

மரக்கிளை,
அசைந்ததும்,
சிறுமழை.

கலங்கரை விளக்கு,
முன்னே தெரிகிறது,
பயணத்தின் இலக்கு.

இணையவழிக் கல்வி,
தினமும் தொடர்கிறது,
பாவம் ஏழைச் செல்வி.

*அய்ஷத்அப்ஸத்*

*பாலமுனை இலங்கை*

## சிப்பிக்குள் முத்து

பெண் உள்ளே
காதல் போல /
மண் உள்ளே
புதையல் போல/

காற்று வெளியில்
மூச்சு போல/
சைகை மொழியில்
பேச்சு போல/

சிப்பிக்குள் இருக்கு
ஒரு பேரழகு/
முத்து என்ற
அதன் பெயரழகு/

இருந்தாலும் இறந்தாலும்
அதுமட்டும் தனியழகு/

**கவிரதன்,**
**மதுரை**

வண்ண மலரே அருகே வா
சாலையோர பூங்காவின்
மாலை நேர மல்லிகையே
பட்டுச் சேலையுடன்
பகலவனை மயக்குகிறாய்

முல்லை மலர்களெல்லாம்
மூடிக்கொண்டதேன் முகத்தை முத்துப் பல் சிரிப்பிடம்
தோற்றுவிட கூடாதென்றா

அன்ன நடை கண்டு
அசைந்தாடும் கொடிகளெல்லாம்
ஒல்லிய இடையை
சுற்றி உறவாடத் துடிக்கிறது

செந்தூர பூக்களெல்லாம்
சென்றுவிட்ட தூரம் கண்டு
வண்ண மலரே அருகே வா
என அழைப்பதைக் கேட்டாயா?

**எம்.பி.எஸ்.பாலா,**
**இலங்கை**



# ஹைக்கூ

## கவிதைகள்

**ஓ**டும் மழை நீர்
வண்ணம் காட்டுகிறது
செம்மண்

**சா**யம் போன
கண்ணாடி
அழுது வடிகிறது

**இ**ல்லை என்று
சொல்வதில்லை
இயற்கை

**வா**னத்தில்
வண்ணஜாலம்
பூமித்தாய் மகிழ்கிறாள்

**வா** என்றவுடன்
வந்துவிடும்
பெண்ணின் கண்ணீர்

**க**த்திக் கத்தியே
உயிரை விடும்
தவளை

**வா**னத்தில் பட்டாசு
கொளுத்திப் போட்டது
யார்

**ப**ணம் காய்க்கும்
செடி
மணி பிளான்ட்

**ஊ**ரெல்லாம் தேடினேன்
ஊர் குருவியைக்
காணவில்லை



**வ.சு.வசந்தா**

# மனம் மட்டும்

# ஒய்தலில்லை....

பேசும் வார்த்தைகள்
முதுமையில் ஊமையானாலும், காதல் மட்டுமே
சத்தங்களின் சங்கீதமாய்.
சிறுவயது காதல் பலதும்
காமத்தின் கழிவறையில்
முதுமை காதலோ
கருவறையில் வெளிச்சபுள்ளியாய்.
நடுங்கும் கரங்கள்
வயதை கூட்டினாலும், முதுமை காதலோ மறு கூட்டலாய்.
வாழ்க்கையின்
கடைசி பக்கங்கள் கிழிந்து போனாலும், முதுமையின் காதல் அட்டைப்பட ஓவியமாய்.
அன்பை முகவரியாய் கொண்ட முதுமை, மரணம்வரை காதலின் வரைபடமாய்.
முதுமை காதல்
என்றும் இளமையாய். ஆம்
காதலாய் மட்டுமே மனம் கடைசிவரை ஓய்தலில்லை.

**ரா.பிரேம் சுரேஷ்**



இருட்டறைக்குள் நாள்பட்டு
அணைத்துக் கிடந்த சிசுவொன்று
புதியவானத்தை ரசித்துக் கொள்ள
நிலத்தில் பாவித்தது
தனது பஞ்சு பாதங்களை..

நட்சத்திரங்களையும்
பிறை நிலவையும்
பச்சைய ஈரத்தையும்
ஈர்த்துக் கொள்ளும் கனவில்
வெளிச்சம் தேடி வந்த சிசுவிற்கு
இங்குள்ள வெக்கையும் வேட்கையும்
நடுக்கம் தந்தன.

அஷ்டகோணங்களின் முகங்கள்
ஈரல் குலையில் அச்சத்தைத் கவ்வின...

வதைத்துப் போட்ட முகங்களிலிருந்து
தூர ஓடி வானவில்லில்
தூளிக்கட்டிக் கொண்டு
ஒய்யார ஊஞ்சலாட
மைல்கல் ஒன்றாக நகர்ந்த பிள்ளைக்கு..
இருந்த தடத்தைக் குனிந்துப் பார்க்க
உலகமே பெரும் மாயாலோகமாக மிரட்டியது.

தப்பிப்பிழைத்து
ஏழுலக வண்ணங்களில் ஒளிந்துக் கொண்டு
நிறம் மாறக் கொள்ளை பிரியம் அதற்கு..

ஒவ்வொரு நிறமாக
தொட்டு இட்டு
தடவிக் கொண்டு
தூளி கட்ட
அங்கும் முழு சூன்யத்தின் சாயை
அரிதாரம் பூசி கலைகட்டியது...

மிரண்டோடி
மீண்டும் கருக்குழந்தையாய்
கடலுக்கடியில் போய் பதுங்கிக் கொண்டது..
இருள் மட்டுமே மிச்சமாய் கைப்பட்டது இறுதியில்....
வெளிச்சம் எப்போதுமே ஒவ்வாமை தான் அந்தச் சிசுவிற்கு....

**து.பா.பரமேஸ்வரி**
**சென்னை**

---

# இருளிலும் ஒளி உண்டு

**சாந்திஸ்ரீதரன்**

நீர்த்த திவலைகளே
மேகமாகி மழையாகும்/
நீண்டதூரம் நீயும் ஓடு நதியெனவே/
நீக்கமற நீயமர சாதனை கரையதுவே/
கிழக்கின் ஒளி சரிந்த பின்னும்/
நிலவு உனக்கு ஒளி தருமே/
இருளிலும் ஒளியுண்டு
நடையிடு வழியுண்டு/
சோர்வுறாத கால்களுக்கு
சுடரொளியின் துணையுண்டு//



# அனுபவம் எழுத்தா? எழுத்து அனுபவமா?

**(சிறப்புக்கட்டுரை)**

பொதுவாகச் சுயசரிதை எழுதுபவர்கள் தனது வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்வுகளை அதில் தொகுப்பார்கள். நிகழ்வுகள் சுவையாகத் தான் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. படைப்பாளி எதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நினைக்கிறாரோ அந்த எல்லா நிகழ்வுகளையும் தெரிவிக்கிறார். கற்பனை கதாபாத்திரத்திலிருந்து கதைகள் எழுதுபவர் வெகு சிலரே. தான் அன்றாடம் கடந்து வரும் நிகழ்வுகளில் சிறந்த உண்மையைப் படம் பிடித்துக் கதையாக மாற்றி மற்றவர்களுக்குச் சுவைபடக் கூறுபவர்கள் சிறந்த கதை மற்றும் நாவல் எழுத்தாசிரியர்களாக இருக்கின்றனர்.

ஓர் அறிவியல் எழுத்தாளருக்கு அனுபவமும் எழுத்தும் எப்படி இருக்கும் என்பதை எனக்குக் கிடைத்த அனுபவத்திலிருந்து இங்கே கூற விரும்புகிறேன். வழக்கமாக அறிவியல் எழுத்து என்பது கட்டுரைகளாகத் தான் இருக்கும். ஒரு புதிய சோதனையைச் செய்து கண்டுபிடிப்பு நிகழ்த்திய உடன் நான் என்ன கண்டுபிடித்தேன் என்பதைக் கட்டுரையாக எழுதிச் சமர்ப்பிக்கிறார்கள். என்னைப் போன்ற அறிவியல் எழுத்தாளர்கள் புதிதாகக் கண்டுபிடிப்பது இல்லை. மாறாக அறிவியல் என்ன என்பதை எளிய உரைநடையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதி வருகிறேன்.


இதில் ஒவ்வொன்றையும் சோதனை செய்தீர்களா? என்றால் இல்லை என்பது தான் சரியான பதிலாக இருக்கும். படித்த புத்தகங்களில் இருந்தும் அறிவியல் புரிதலோடும் எளிய உதாரணங்களைக் கொண்டு அறிவியலை விளக்க வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். பத்துக்கும்

மேற்பட்ட நூல்களை இதுவரை எழுதி விட்டேன். அதில் கடைசியாக நான் எழுதியது "உடைக்காமல் என்னைக் கண்டுபிடி" என்ற புத்தகம்.

அந்தப் புத்தகத்தில் மருத்துவமனைக்குச் செல்லும் பொழுது உடல்நல பிரச்சனையைக் கண்டறிய எக்ஸ்ரே மற்றும் அல்ட்ரா சவுண்ட் சோதனைகள் போதுமானதாக இல்லாத பொழுது எப்படிச் சிடி ஸ்கேன் உதவுகிறது என்று ஒரு கட்டுரை இருக்கும். சிறிது காலமாக வயிற்று வலி இருக்கிறது என்று மருத்துவரைச் சந்தித்தேன். அவரும் அல்ட்ரா சவுண்ட் செய்து வருமாறு கூறினார். அதன் தரவுகளைப் பார்த்தபிறகு போதுமான செய்திகள் இன்னும் கிடைக்கவில்லை. அப்படியே சிடி ஸ்கேன் செய்து விடுங்கள் என்று கூறினார்.

அச்சுஅசலாகப்புத்தகத்தில்நான்எழுதியது அப்படியே நடக்கிறது என்ற பெருமையோடு சிடி ஸ்கேன் எப்பொழுது எடுக்க வேண்டும் என்று கேட்டுப் பணத்தைக் கட்டி விட்டு நாள் குறித்தேன். எப்படி தாயராக வேண்டும் என்று அந்தத் துறையின் செவிலியர் எனக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார். பரிசோதனை செய்வதற்கு முந்தைய நாள் மாலை இந்த இரண்டு பாட்டிலில் உள்ள மருந்தைக் குடிக்க வேண்டும் என்றார். எதற்கென்று கேட்டபொழுது வயிற்றில் உள்ள அனைத்தையும் சுத்தம் செய்தால் தான் எங்களால் சிடி ஸ்கேன் எடுக்க முடியும் என்றார்.

கூறியபடி மருந்தை வாங்கிக் கொண்டேன். மாலை 5 மணிக்கு முதல் குப்பியில் இருந்த மருந்தைக் குடித்தேன். வயிற்றுப்போக்காகவே இருந்தது. உடலில் இருந்து அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டது. எந்த உணவும் உண்ணாமல் உறங்கிக் காலை எழுந்தேன். உணவு ஏதும் உண்ணாமல் இருக்க வேண்டும் என்பதால் எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தேன். சரியாகப் பத்து மணிக்குப் பரிசோதனை அறையில் உள்ளே அழைத்தார்கள்.



சிடி ஸ்கேன் எடுக்கும் இயந்திரத்தின் படுக்கையில் ஏறி அமர்ந்து கொண்டேன். அந்த அறைக்கு அருகில் தான் எம்ஆர்ஐ இயந்திரமும் இருந்தது. இந்த இரண்டையும் ஒருசேர அங்கே இருந்த தொழில்நுட்ப வல்லுநரும் செவிலியர்களும் இயக்கிக் கொண்டிருந்தனர். எப்படி அறிவியலை ஊர்ந்து கவனித்து எழுதி உள்ளேன் என்ற மமதையில் அந்தப் படுக்கையில் படுத்து இருந்தேன் என்று கூறலாம். என்னிடம் கேள்வி கேட்ட செவிலியரிடம் எம் ஆர் ஐ இயந்திரத்தைக் குறித்துச் சில தகவல்களை அள்ளி வீசினேன். ஆச்சரியப்பட்டுப் போனார்.

இது எப்படி உங்களுக்குத் தெரியும் என்று கூறினார். நான் புத்தகம் எழுதியுள்ளேன். அதில் குறிப்பிட்டு உள்ளேன் என்று பெருமையும் பேசிக்கொண்டேன். சிடி ஸ்கேன் என்பது பல எக்ஸ்ரேக்களைத் தொடர்ச்சியாக

எடுத்துப் பிம்பத்தை உருவாக்கும் ஒரு பரிசோதனை முறையாகும். இதைப் பற்றி விரிவாக எனது புத்தகத்தில் நீங்கள் படிக்கலாம். அனைவரும் அறையிலிருந்து வெளியே சென்று விட்டனர். அறையின் குளிர் மிகவும் அதிகமாக இருந்தது உடல் நடுங்கும் அளவு இருந்தது என்று கூறலாம்.

போதுமான அளவு தண்ணீர் குடித்து வயிறு நிரம்பி இருந்த நேரத்தில் முதல் சுற்று சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. இரண்டாவதாக நரம்பில் வண்ணப்பூச்சு ஒன்றை செலுத்துவோம் என்று கூறினார்கள். அது போல் கையில் ஒரு ஊசி குத்தப்பட்டு அதன் வழியாக உடலுக்குத் தீங்கு விளைவிக்காத வண்ணதிரவம் செலுத்தப்பட்டது. அது வயிறு மற்றும் உடலில் உள்ள உறுப்புகளின் வழியாகப் பயணம் செய்யும் பொழுது உறுப்புகளுக்கு ஏதாவது பிரச்சனை இருக்கிறதா? என்பதைக் கண்டறிய சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது.

உடலின் மேலே எறும்பு ஊறினாலே நமக்குப் பிரச்சனையாக இருக்கும். நரம்பின் வழியே அன்னியப் பொருள் அதிக அழுத்தத்தில் செல்லும் பொழுது எப்படி இருக்கும். பல்லைக் கடித்துக் கொண்டு வேதனைகளைத் தாங்கிக் கொண்டேன். இந்தப் பரிசோதனை முடிவடைந்து விட்டது ஒரு லிட்டர் தண்ணீரும் உங்களுக்குப் பிடித்த பழச்சாறும் வாங்கி வாருங்கள் என்று செவிலியர் என் உதவிக்கு வந்திருந்த என் மனைவியிடம் கூறினார். ஏன் என்று கேட்ட பொழுது உடலின் உள்ளே மருந்தைச் செலுத்தி எடுக்க வேண்டிய சிடி ஸ்கேன் எடுத்து முடிக்கப்பட்டு விட்டது.

இனி வெளியில் இருந்து கொடுக்கப்படும் மருந்து என்று கூறினார்கள். பழச்சாறில் மருந்தைக் கலந்து தண்ணீரில் கலக்கி கொடுத்தார்கள். மாம்பழச் சாறு வாங்கி வா என்று மனைவியிடம் கூறினேன். மருந்து கலந்து கொடுத்த அந்தப் பழச்சாற்றை ஒரு மணி நேரத்தில் சிறிய சிறிய அளவுகளாக 900 மில்லி லிட்டர் குடித்திருக்க வேண்டும்.

பரிசோதனை அறைக்கு உள்ளே செல்லும் பொழுது 100 மில்லி லிட்டர் கையில் இருக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். ஆவலோடு தண்ணீர் கலந்த பழச்சாறையும் அதில் கலந்துள்ள மருந்தையும் வாயில் ஊற்றிப் பார்த்தேன். ஏதோ கெட்டுப்போன மாம்பழத்தின் சுவையில் அது இருந்தது. என்ன செய்வது குடித்துத்தானே ஆகவேண்டும் என்று சிறிது சிறிதாகக் குடிக்க ஆரம்பித்தேன்.

அறையின் வெளியே சிறிது நேரம் இருந்ததால் எனது உடைக்காமல் என்னைக் கண்டுபிடி புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பைச் சரிபார்த்துக் கொண்டிருந்தேன். அதுவரை உடம்பு ஒத்துழைக்கத் தான் செய்தது. ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் உள்ளே அழைத்துச் சென்றார்கள். வெளியிலிருந்து உண்ணப்படும் மருந்து தானே அதைத்தான் குடித்து விட்டேனே பிரச்சனையில் இல்லை என்று சமாதானம் செய்து கொண்டு உள்ளே சென்றேன்.

பெரியவர்களுக்குத் தேவையான டயப்பர் மற்றும் சிறிய குழாய் போன்ற பொருட்களை வாங்கி வரச் சொல்லி இருந்தார்கள். ஏன் எதற்கு என்று புரியவில்லை. பரிசோதனையின் வில்லன் அதில்தான் இருந்தது என்பது உள்ளே சென்று அவர்கள் கூறியவுடன் தான் தெரிந்தது. நமது உடலில் உள்ள ஐந்து துவாரங்களில் எது வழியாகச்

செலுத்தினாலும் அது வெளியில் இருந்து அனுப்பப்படும் மருந்து தானே. வாயின் வழியே மருந்து குடித்ததோடு, ஆசனவாய் வழியாக வேறொரு மருந்தையும் செலுத்தி சிடி ஸ்கேன் எடுக்க வேண்டும் என்பதுதான் அந்த முறை.

ஆசனவாயில், வாங்கி வந்த டியூப் சொறுகப்பட்டது. அதன் வழியாகவும் சில மருந்துகள் செல்லும் என்று கூறினார்கள். அதிக அழுத்தத்தில் அது ஆசனவாயிலிருந்து வயிற்றின் மேல் பகுதிக்குச் சென்ற பொழுது தாங்க முடியாத வலி ஏற்பட்டது. கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்படும்பொழுது கழிவறை கிடைக்காமல் வயிற்றைப் பிடித்துக் கொண்டு எப்படிக் கஷ்டப்படுவோம் அதைவிடப் பல மடங்கு வேதனை உருவாகியது.

பரிசோதனை தொடங்கும் பொழுது எப்படிச் செய்வோம் என்று கூறியிருந்தார்கள். எப்பொழுது மூச்சை அழுத்திப் பிடிக்க வேண்டும் எப்பொழுது மூச்சை விட வேண்டும் என்று தெரிவித்தார்கள். பக்கத்து அறையில் இருந்த நபர் பேசும் பொழுது ஒலிபெருக்கியின் வழியாக அது எனக்குக் கேட்டது. அதேபோல் நான் பேசுவது பக்கத்து அறையில் கேட்கவும் செய்ததது. மாட்டிக்கொண்டேன் எழுந்து ஓடினால் போதும் என்ற நிலையில் பரிசோதனை சென்று கொண்டிருந்தது. என்னால் முடியவில்லை விட்டு விடுங்கள் என்று கூறலாமா? என்று பார்த்தேன்.

சொல்லிப் புண்ணியம் இல்லை பல்லைக் கடித்துக்கொண்டு படுத்திருப்போம் என்று படுத்திருந்தேன். இப்படியாக வாய் வழியாகக் கொடுத்த மருந்தும் ஆசனவாய் வழியாகச் சென்ற மருந்தும் எங்கே செல்கிறது குடலில் ஏதாவது பிரச்சனை இருக்கிறதா என்று பரிசோதனை நடந்து கொண்டே இருந்தது. 20 நிமிடங்கள் கடுமையான உபாதைகளுக்குப் பிறகு பரிசோதனை முடிவடைந்து விட்டது என்று கூறினார்கள்.

கிட்டத்தட்ட 20 மணி நேரங்களுக்கு மேலாக உணவு சாப்பிடாமல் இருந்தேன். அதைவிடப் பரிசோதனையில் உடம்பு களைப்படைந்திருந்தது. தெரியாத்தனமாக வயிற்றுக்குச் சிடி ஸ்கேன் செய்ய ஒத்துக்கொண்டு விட்டேனே என்று என்னையே நொந்து கொண்டேன். விட்டால் போதும் என்று பரிசோதனை அறைக்கு வெளியே வந்தேன். என்ன ஆயிற்றுப் பரிசோதனை முடிந்து விட்டதா என்று மனைவி கேட்டார்.

எனக்கு அடுத்ததாக வயதான பெண்மணி இதே பரிசோதனைக்காகக் காத்திருந்தார். நமக்கே இந்த நிலைமை என்றால் அவர் எப்படித் தாக்கு பிடிப்பார் என்று அவரது நிலைமையை நினைத்துக் கவலைப்பட்டேன். வெளியே வந்த செவிலியர் உணவு சாப்பிட்டு விட்டு வயிறு வேலை செய்கிறதா? ஏதாவது உபாதை இருக்கிறதா? என்பதை உறுதி செய்யுங்கள். அதன் பின்பு தான் கையில் குத்தியுள்ள ஊசி எடுக்கப்படும் என்று கூறினார். தட்டுத் தடுமாறிக் கொண்டு வந்திருந்த எலுமிச்சம்பழ சாதத்தைச் சாப்பிட்டுவிட்டுப் பிரச்சனை ஏதும் இல்லை என்று அவர்களிடம் கூறினேன்.

கையில் இருந்த ஊசி அகற்றப்பட்டது. காரை நானே ஓட்டிச் சென்று இருந்ததால் பத்திரமாக வீடு வந்து சேர்ந்தேன். மிகுந்த களைப்பில் உறங்கி விட்டேன். அடுத்த நாள் பரிசோதனையின் முடிவுகள் புகைப்படம் ஆகவும் தட்டச்சு செய்தும் கொடுக்கப்பட்டது. பிரச்சனை ஏதுமில்லை உடல் உறுப்புக்கள்

நன்றாகத் தான் இருக்கின்றன என்று கூறினார்கள்.

"அனுபவமே சிறந்த ஆசான்" என்ற பழமொழி என் ஞாபகத்திற்கு வந்து போனது. அறிவியல் எழுத்தாளரால் எல்லா அறிவியல் கட்டுரைகளையும் சோதனை செய்து பார்க்க இயலாது. ஆனால் நான் எழுதிய புத்தகத்தின் கட்டுரையில் ஒரு சில வரிகளில் மேலும் பத்திகளில் குறிப்பிடப்பட்டிருந்த செயல்முறை எவ்வளவு உபாதையாக இருந்தது என்பதை அனுபவித்த போது மற்ற கட்டுரைகளில் எழுதி உள்ள பரிசோதனைகள் எப்படி இருக்கும் என்று ஒரு நிமிடம் யோசித்துப் பார்த்தேன்.

அனுபவத்திலிருந்து எழுத்தை உருவாக்காமல் நான் எழுதிய கட்டுரையிலிருந்து அனுபவத்தைப் பெற்றது புதியதாக இருந்தது. இந்தக் கட்டுரையைப் படிக்கும் நீங்களும் அறிவியல் கூறுவதும் உங்களுக்கு நடந்ததும் எப்படி இருந்தது என்று முடிந்தால் தெரிவியுங்கள்.



–இஸ்ரோ விஞ்ஞானி,

முனைவர் **பெ.சசிகுமார்**

# இருளிலும் ஒளி உண்டு

உடைந்த இதயம்
தூவண்டே கிடக்கும்//
கவலை நிறைந்து
கனத்துத் துடிக்கும்//
காண்போர் எல்லாம்
வெறுக்கப் பார்க்கும்//
காட்டில் சென்று
தனிமை தேடும்//
கதவைப் பூட்டி
கத்தி கதறியழும் //
இருளிலும் ஒளி
உண்டு என்றுணரும்//
தன்னம்பிக்கையுடனே
தைரியமாய் முதலடி பதிக்கும்//

**பூங்குழலி**
**சுவிற்சர்லாந்து**

## எனது பார்வையில்

# பாரதி



உன் அழகிய தமிழ் எழுத்துக்களைப் பார்த்த எனக்கு
உன் அழகிய முகத்தினை பார்க்க வாய்ப்பு கிட்டவில்லையே
என்ற வேதனையில் எழுதுகிறேன் முயன்றால் பார்.!

உன் கவிதை வரிகளில் உயிர் கொடுக்கத் தெரிந்த உமக்கு
ஏன் என் கவிதை வரிகளுக்கு உயிர் கொடுக்க முடியவில்லை
இத்தகைய துக்கத்துடன்,
என் கவிதை வரிகளில் உன் நியாபகங்களை வைத்து உயிர்
கொடுக்கிறேன்.!
உன் அழகிய தோற்றங்களில் ஒன்றான
உன் தலைபாகையினை அடைய
நான் பஞ்சாப் வரை செல்ல வேண்டுமோ
என்று எண்ணிய நாட்களும் உண்டு !

இதுவரை நான் உன்னைப் புகைப்படங்களில்
பார்த்தாலோ என்னவோ
உன் கருப்பு சட்டையும், வெள்ளை தலைபாகையும்
மட்டுமே தெரியும்.
நீ உன் கால் சட்டையாகக் கைலியோ, கதர் கால் சட்டையோ
அல்லது வெளிநாட்டவர் அணியும் வன் துணியாடையோ
என்று எண்ணிய நாட்களும் உண்டு.!
இத்தகைய உன் நியாபகங்கலாள் !!
என் கவிதை வரிகளுக்கு உயிர் கொடுத்துள்ளேன் என்று
நம்புகிறேன்.

*இரா. அற்புதகிருஷ்ணா*
*போர்ப்படை திறனியன், இரண்டாம் ஆண்டு*
*அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி, வியாசர்பாடி*

# அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை

புதிய எழுத்தாளர்களின் எண்ணப் போக்கை / கவித்துவத்தை/ கதை புனையும் ஆற்றலை/ செய்தி வெளிபாடுகளை நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். புதியன படைக்கும் ஆர்வமிக்க எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்களின் இலக்கியப் பங்களிப்பை வெளிஉலகத்திற்குக் கொண்டு சென்று பெருமைப்படுத்துவதற்கும், இலக்கியத்தை வளர்ப்பதற்கும் நாங்கள் காத்திருக்கின்றோம். எழுத்தாளர்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து தமிழுக்குப் புதுஊக்கம் தர முயற்சிக்கின்றோம்.

இணைந்து செயலாற்றக் கீழ்கண்ட குழுமங்களாய் அழைக்கின்றோம்

- அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் தொலைக்காட்சி
- அமெரிக்க முத்தமிழ் சிறுவர் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் நூல் ஆய்வுப் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் ஹைக்கூப் பேரவை
- கலை உதயம் பதிப்பகம்
- அமெரிக்க முத்தமிழ் ஆசிரியர் பேரவை
- முத்தமிழ் நேசன் - இலக்கிய இதழ்

தமிழ்மாமணி முனைவர் இரா.உதயநேசன் அவர்கள் எழுதிய நூல்கள் அனைத்தும் கிடைக்குமிடம்:

கலை உதயம் பதிப்பகம்

எண்: 10, முதல் தெரு, ஸ்ரீ ராமாபுரம்

ஆம்பூர் 635802

திருப்பத்தூர் மாவட்டம்

போன் 9159698466



# உலகத் தமிழர்களே!

கலை – இலக்கியம் – சமூகவியல் – நாட்டுப்புறவியல்
உள்ளிட்ட
இணைய வழி வகுப்புகள் தொடங்கிவிட்டன....
இன்றே இணைய வாரீர்....

உலக அரங்கில்
தனியாய் ஒரு
உன்னத உலகம்!

தமிழே நமது உயிர் மொழி!– அது
தமிழரின் உயர்வுக்கு ஒரே வழி!

## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

விபரங்களுக்கு:
www.americamutamiluniversity.org